**செய்தி வெளியீடு எண்: 566** **நாள்:04.09.2019**

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மாதக் கட்டணத்தை ரூ.130/– + வரி என குறைத்து, ஆகஸ்டு 10, 2019 முதல் நடைமுறைப்படுத்த அறிவிப்பு வெளியிட்டார்கள். 60 கட்டணச் சேனல்கள் உட்பட 200 சேனல்கள் வழங்கப்படுகின்றன. பொதுமக்கள் அதிகம் விரும்பும் சேனல்களான விஜய் டிவி, சன் டிவி, கே டிவி, ஆதித்யா டிவி, சுட்டி டிவி, ராஜ் டிவி, ஜெயா டிவி கலர்ஸ் தமிழ், ஜீ தமிழ், மெகா டிவி, டிஸ்கவரி தமிழ், ஸ்டார் ஸ்போர்ட்ஸ் 1 தமிழ், மூவிஸ் நவ் போன்ற சேனல்களும் வழங்கப்படுகின்றன.

பொதுமக்கள் இச்சேவையைப் பெறுவதற்கு, தங்கள் பகுதி உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களை அணுகலாம், தற்சமயம் செட்டாப் பாக்ஸ் முற்றிலும் விலையின்றி வழங்கப்படுகின்றது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**